# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 10 OCTOBER 2024

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# சாகிறவனுடைய சாவை விரும்பாத தேவன்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN


செம்பட்டியில்
ஆசீர்வாத
உபவாச
ஜெபம்
OCT
12
சனிக்கிழமை
9:30 AM TO 2:30 PM
இயேசுவின்
பாதத்தில்
11
OCT
FRI
இடம்:
வானத்தின்
வாசல்
எழுப்புதல் ஜெப
மையம்
செம்பட்டி, திண்டுக்கல்
தேவ செய்தியாளர்கள்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
செம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து ஜெப மையம் செல்ல காலை 11:30 மணி வரை வேன் வசதி உண்டு
உபவாச ஜெபம் முடிந்தவுடன் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்படும்.


மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
காலை 9.30
மணி முதல்
2.30 மணி
வரை
19
சனிக்கிழமை
OCTOBER
EVG
EVG
Kala Vincent Raj
இடம்: இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம் PRC Depot
அருகில், மதுரை
தொடர்புக்கு : 9498000449 , 9442800449

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.
சங் 17:7 உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும் என்ற வார்த்தையின்படி தேவன் இந்த நாட்களில் தம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த நாட்களில் நடைபெற்ற ஒவ்வொரு கூட்டங்களையும் தேவன் ஆசீர்வதித்தார். செப்டம்பர் 5,6,7 ஆகிய தேதிகளில் திருப்பத்தூரில் நடைபெற்ற பரிசுத்த உபவாச முகாமை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஒவ்வொரு தேவ ஊழியர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். தேவன் பாராட்டின தயவுக்காக நாம் நன்றி சொல்ல வேண்டும். அதேபோல ஒவ்வொரு உபவாச ஜெபங்களையும் தேவன் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். தொடர்ந்து நாம் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவித்து இந்த பூமியில் கர்த்தருடைய ராஜ்யத்தைப் பரப்ப கருத்தாய் ஜெபிக்க வேண்டும். நம்முடைய நாட்களிலேயே தேவனுடைய ராஜ்யம் வெளிப்பட வேண்டும். நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் செய்யப்படுகிற அனைத்து ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்து நடத்த ஜெபியுங்கள். அக்டோபர் 2-ம் தேதி பெங்களூரிலும், 11-ம் தேதி TELC ஆலய சபா மண்டபம்-கோவையிலும், 31-ம் தேதி திருச்சியில் குடும்ப ஆசீர்வாத கூட்டமும் நடைபெறுகிறது.



இக்கூட்டங்களில் அந்தந்த பகுதியில் உள்ளவர்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம். தொடர்ந்து தங்களின் மேலான ஜெபத்தாலும் காணிக்கைகளினாலும் இந்த ஊழியத்தை தாங்கிட மறவாதிருங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

L. Vincentraj

(சகோ. L.வின்சென்ட்ராஜ்)

# சாகிறவனுடைய சாவை விரும்பாத தேவன்



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

எசேக்கியேல் 18:32 - மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள், சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இவன் இந்த உலகத்தில் உயிரோடு இருக்க தகுதி இல்லாதவன். கொலைகாரன். திருடன். வஞ்சகன். ஏமாற்றுகிறவன் என்று சிலர் சொல்லுவார்கள். உலகம் மற்றவர்களை சில காரியத்தில், இவன் ஒரு குற்றவாளி, மரணத்துக்கு நியமிக்கப்பட்டவன், சாவை தவிர வேறு வழியே இல்லை என்று சொல்லும். ஆனால் கொலைக்கு நியமிக்கப்பட்ட மனிதனுடைய சாவை தேவன் விரும்புகிறதில்லை என்று வேதம் சொல்லுகிறது. மனம் திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். நான் சாகிறவனுடைய சாவை விரும்புகிறதில்லை என்று தேவன் சொல்லுகிறார். இன்றைக்கு அநேகர் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் தான் இருக்கிறார்கள்.

கேன்சர் வியாதி மிகவும் கொடுரமானது. அணு அணுவாக சாகிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இன்றைக்கு மரித்து விடுவார்கள் அல்லது நாளைக்கு மரித்து விடுவார்கள் என்று நினைக்கின்ற அளவிற்கு நிறைய பேர் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு மருத்துவரை தெரியும், அவர் ஒரு கேன்சர் ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர். தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை கொடுத்துக்கொண்டே இருப்பார். சில நாட்கள் வியாதி குறையும். திரும்பவும் அதிகரித்து விடும். இந்த வியாதி கிருமிகள் அதிகமாக பரவ பரவ சில உறுப்புகள் பாதிக்கப்பட்டு அதை எடுக்க வேண்டிய நிலைமை கூட வரும்.இதனால் தலைமுடிகள் அனைத்தும் கொட்டிவிடும். அவர்கள் தோற்றத்தில் உரு குலைந்து போய்விடுவார்கள். அப்பொழுது தான் மருத்துவர் ஒரு முடிவு செய்வார். இந்த நபர் இனி பிழைக்க மாட்டார் என்று தெரிந்தவுடன். அந்த நபரிடம் நீங்கள் சரியாகி விட்டீர்கள் இனி உங்களுக்கு ஒரு தீங்கும் நேரிடாது என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். அந்த மனிதனும் மருத்துவர் சொன்ன வார்த்தையை நம்பி தன் வீட்டிற்கு சென்றார்.

பத்து ஆண்டுகளுக்கு பின்பு இந்த மருத்துவர் ஒரு ஷாப்பிங் சென்டருக்கு சென்றபோது அங்கு அந்த நபரை சந்தித்தார். பத்தே நாளில் இறந்து விடுவார் என்று தன்னால் அனுப்பி வைக்கப்பட்ட அந்த மனிதனை அங்கு அவர் பார்த்த போது நீங்கள் என்னிடம் மருத்துவம் பார்த்தவர் அல்லவா. உங்கள் பெயர் என்ன என்று கேட்டார். அவர் தனது பெயரை சொன்னார். மருத்துவரை அந்த நபரும் அறிந்து கொண்டார். மருத்துவருக்கு ஒரே அதிர்ச்சி. நீ எப்படி இன்று வரை உயிரோடு இருக்கிறாய் என்று அந்த நபரை கேட்டார். டாக்டர் நீங்க சரியாயிருச்சன்னு சொல்லி அனுப்பி விட்டீங்க. நான் வீட்டுக்கு சென்று இயேசுவை நோக்கி கூப்பிட்டேன். அவர் எனக்கு சுகம் தந்து இன்று வரை என்னை உயிரோடு வாழ வைத்திருக்கிறார் என்றார். அப்பொழுது தான் அந்த மருத்துவர் நினைத்தார் வியாதி முற்றி என்னால் கைவிடப்பட்ட ஒரு மனிதன் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை நோக்கி ஜெபித்தபோது அவர் சுகம் தந்து இன்று வரை உயிரோடு இருக்கிறான். அந்த இயேசு எனக்கு வேண்டும்

என்று சொல்லி அவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

பிலி 1:12-ல் பவுல் அப்போஸ்தலன் சொன்னது போல சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும் படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன் என்ற வார்த்தையின்படி இந்த நபருக்கும் நடந்திருக்கிறது. இன்றைக்கு மரண ஆக்கினைக்கு இந்த உலகம் நியமிக்கப்பட்டு இருக்கிறது. உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஜனங்கள் கொத்து கொத்தாக மடிந்து கொண்டிருக்கிறார்கள். யுத்தங்கள், நிலச்சரிவுகள், பூமி அதிர்ச்சிகள் ஏற்பட்டு ஜனங்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். மரணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

பொல்லாத உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் சாப்பிடுகின்ற சாப்பாட்டில் இருந்து, குடிக்கின்ற தண்ணீர் முதற்கொண்டு அனைத்திலும் நச்சுத்தன்மை உள்ளதாய், விஷம் நிறைந்ததாய் இருக்கிறது. வியாதிகள் பெருகி கொண்டிருக்கிறது. மருத்துவமனைகளும் பெருகிக் கொண்டிருக்கிறது. வியாதி ஒரு பக்கம், குடும்ப பிரச்சனை ஒரு பக்கம். ஒவ்வொரு நாளும் மனிதன் போராட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் அனுதினமும் சாகிறேன். மடிந்து கொண்டிருக்கிறேன் என்று. இப்படி மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிற.வேதனையோடு போர்க்களத்திலே நின்று செத்து மடிந்து கொண்டிருக்கிற மனிதர்களை பார்த்து தான் ஆண்டவர் சொல்லுகிறார் சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று. அப்படி என்றால் என்ன அர்த்தம் நீ வாழ வேண்டும். நீ வாழத் தகுதியானவன் என்று அர்த்தம். நீ இந்த பூமியிலே நீடித்த நாட்களாய் வாழத் தகுதியுள்ளவன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நீ சாகவே மாட்டாய் என்று ஆண்டவர் சொல்லவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு காலம் வைத்து இருக்கிறார். மண்ணிலே பிறந்த எவனும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று வேதத்தில் எபிரேயர் 9:27-ல் சொல்லப்பட்டுள்ளது. மனிதன் திடீரென்று மரிக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம் அல்ல. நல்ல சுகத்தோடு, பலத்தோடு, தீர்க்காயுசோடு இந்த பூமியில் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் 120 வயது என்பதை தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கிறார். ஆஸ்திரேலியாவிற்கு ஊழியத்திற்கு சென்றபோது அங்கு ஒரு தாயார் இருந்தார்கள். அவர்களுக்கு வயது 96 அவர்கள் துணியை அவர்களே துவைப்பார்கள். வீட்டு வேலைகளை அவர்களே செய்வார்கள். நல்ல ஒரு தாயார். தேவன் தந்த பலத்தோடு, சுகத்தோடு இருந்து வாழ்ந்து மரித்திருக்கிறார்கள்.தற்போது சிலருக்கு ஆண்டவர் கொடுத்த பெலன் 40 வயதிலேயே தள்ளாடுகிறார்கள், தடுமாறுகிறார்கள். பலன் குறைந்து போய்விடுகிறது. சிலருக்கு படிக்கட்டு ஏற முடியாமல் மூச்சு வாங்குகிறது. ஆனால் இந்த காலத்தில் ஒருத்தருக்கு ஒருத்தர் சண்டை, பழிவாங்குதல், ஏமாற்றப்படுதல் இவைகளைப் பார்க்கும் போது உள்ளம் உடைந்து போய் விடுகிறார்கள். ஏமாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் நான் ஏன் வாழ வேண்டும் என்று தவறான முடிவுகளுக்கு செல்கிறார்கள். மனமடிவில் துவண்டு விடுகிறார்கள். மனமுறிவு ஏற்படுகிறது.

2 கொரி 4:8-ல் பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை என்று. நாங்கள் எப்பக்கம் நெருக்கப்பட்டும், மருத்துவர்களால் கைவிடப்பட்டும், கூட இருந்தவர்களால் பழிவாங்கப்பட்டும், எல்லா சூழ்நிலையில் கடந்து வந்தாலும் நாங்கள் கைவிடப்படுவதில்லை. மனம் முறிவடைவதில்லை என்று சொல்லுகிறார். இனி நான் ஜெபிக்க மாட்டேன். இனி நான் ஊழியம் செய்யமாட்டேன். எனக்கு போராடப் பெலனில்லை என்று மனிதன் சொல்லுகிறான். யோபு சொல்லுகிறார் பூமியிலே மனிதனுக்கு போராட காலம் உண்டு என்று. யோபுவின் சரீரம் முழுவதும் அழுகி நாறுகிறது. நரம்புகள் எல்லாம் தெரிகிறது. சொந்த மனைவி துரோகியாக மாறிவிட்டாள். தேவனை தூஷித்து ஜீவனை விட சொல்லுகிறாள்.இந்த நிலையில் யோபு மனம் உடைந்து இருப்பார். ஆனால் ஆண்டவர் மீது நம்பிக்கையோடு இருந்தார்.

## உன் காலத்திற்கு முன் நீ சாவதில்லை.

என்னால் இந்த பிரச்சனையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் குடும்பத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியினால் மற்றவர்களை என்னால தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை என்று நீங்கள் மனம் உடைந்து இருக்கலாம். சாவதைத் தவிர வேறு வழி இல்லை. வறுமை, கஷ்டம், கணவன் கைவிட்டு விட்டு சென்று விட்டான். பெற்ற பிள்ளைகளும் சொத்தை எழுதி வாங்கி, அபகரித்துச் சென்று விட்டார்கள். நான் ஏன் வாழ வேண்டும். நான் ஏமாற்றப்பட்டேன். என் பணம் அபகரிக்கப்பட்டு விட்டது. எனக்கு வர வேண்டிய சொத்துக்கள் வரவில்லை என்று கண்ணீர் வடிக்கிறார்கள். ஒரு சகோதரி வந்து என்னிடம் அழுதார்கள் என் கணவர் மரித்து போய்விட்டார். ஆனால் அவரோடு கூட பிறந்தவர்கள் எங்களுக்கு தெரியாமலே சொத்துக்களை விற்று விட்டார்கள். ஒரு ரூபாய் கூட எங்களுக்கு தரவில்லை என்று மிகவும் மனமுடைந்து போய் விட்டார்கள். இப்படித்தான் ஒவ்வொருவரும் பல பிரச்சனைகளின் ஊடாய் கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். வெளியில் சிரிக்கிறார்கள். ஆனால் உள்ளத்தில் மிகுந்த வேதனையோடு இருக்கிறார்கள்.

**பிரசங்கி 7:16,17-ல் கர்த்தருடைய வார்த்தை இப்படி சொல்லுகிறது மிஞ்சின நீதிமானாயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே, உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்? மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே, உன் காலத்துக்குமுன்னே நீ ஏன் சாகவேண்டும்?** ஆண்டவர் நமக்கு ஒரு நியமத்தை வைத்திருக்கிறார்.இந்த பூமியில் நீ இத்தனை ஆண்டுகள் வாழ வேண்டும் என்று. அதனால்தான் வேதத்தில் நீடித்த நாட்களாய் உன்னை திருப்தியாக்குவேன் என்று சொல் லப்பட்டுள்ளது. என்னுடைய போராட்டங்கள் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, என்னால் வாழ முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். குடும்ப சண்டையில் கூட சிலர் சொல்லுவார்கள் நான் இறந்தால் தான் உனக்கு தெரியும் என்று. இந்த வார்த்தையை சாத்தான் எழுதி வைத்துக் கொள்ளும் நீதிபதி அவர்களே, நான் அல்ல உன் கட்சிக்காரரே இந்த வார்த்தைகளை சொல்லுகிறார்கள் என்று சொல்லுவான். அந்த வார்த்தையை வைத்து தான் இந்த மனிதன் பூமியில் வாழ தகுதியற்றவன் என்று சாத்தான் நம்மோடு போராடுவான்.நாமும் கூட இப்படி பேசி இருப்போமானால் அதை இந்த நாளில் தேவனிடத்தில் அறிக்கை செய்து அதற்காக மன்னிப்பு கேட்போம். சாத்தானை பிரியப்படுத்தும் வார்த்தைகளை நாம் பேசக்கூடாது. காலத்திற்கு முன்பே நாம் மரிப்பதை தேவன் விரும்பவில்லை. நம் காலங்கள் அவர் கரத்தில் இருக்கிறது சாகிறவனுடைய சாவை தேவன் விரும்பவில்லை, மனம் திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள் என்று தேவன் சொல்லுகிறார்.

## உன்னை வாழ வைக்கத்தான் இயேசு வந்தார்.

நம்மை வாழ வைக்கத்தான் இயேசு மரணத்தை ருசி பார்த்தார். சாத்தான் திருடுகிறவன், கொல்லுகிறவன், அழிக்கிறவன். ஏன் வாழ்கிறாய்? நீ தான் பிடிபட்டு விட்டாயே, குற்றுயிராய் கிடக்கிறாயே இனி நீ வாழ வேண்டுமா? என்று நம்மை பார்த்து கேட்பான். **யோவான் 10:10-ல் திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார்.** இன்றைக்கு உங்கள் சுகவீனத்தை, பெலவீனத்தை, அலைச்சலை, கண்ணீரை, மரணத்தை தேவன் விரும்பவில்லை. ஆண்டவர் மனிதனை நல்லவனாக படைத்தார்.ஏதேனில் நித்திய வாழ்க்கையை வைத்திருந்தார். என் கூடவே இருக்க வேண்டும், இந்த தோட்டத்தில் என்னோடு உலாவ வேண்டும், என் சத்தத்தை கேட்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவர்களுக்கு ஒரு நியமத்தை வைத்தார் இந்த தோட்டத்தில் உள்ள எல்லா கனிகளையும் நீங்கள் புசிக்கலாம். ஒரு மரத்தின் கனியை மட்டும் நீ புசிக்கக் கூடாது என்றார். அதை நீங்கள் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்றார். முதலில் உன்

ஆத்துமா செத்துப் போய்விடும். இரண்டாவது உன் சரீரம் உருக்குலைந்து போய்விடும். தேவன் முதலில் மனிதனை படைக்கும் போது சாவே இல்லாமல் தான் படைத்திருந்தார். சாவு என்பது சாத்தானுக்காக நியமிக்கப்பட்டிருந்தது. அவனுக்கு ஒரு முடிவு அது. **ஆதி 3:4,5-ல் அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை, நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.** தேவன் அந்த கனியை புசிக்கும் நாளில் நீங்கள் சாவீர்கள் என்றார். சாத்தானோ நீங்கள் அதை பசிக்கும் நாளில் சாகவே சாவதில்லை என்றது.

கிறிஸ்தவத்தில் கூட நிறைய பேர் நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொல்லி உபதேசிக்கிறார்கள். தவறான உபதேசங்களை போதித்து மக்களை திசை திருப்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு சொத்துக்களையும், உடைமைகளையும் எழுதிக்கொடுக்கிறார்கள். நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொல்லுவது சாத்தானுடைய உபதேசம். இந்த உபதேசத்திற்கு நாம் செவி சாய்க்க கூடாது. இன்றைக்கு சிலர் இந்த தவறான உபதேசத்தை நாடி தேடி போகிறார்கள். சாத்தான் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான் என்று வேதம் நமக்கு தெளிவாக சொல்லுகிறது. ஏவாளை வஞ்சித்து, அந்த இடத்திற்கு கூட்டிட்டு போய், அந்த பழத்தை தொட்டு, பறித்து, சாப்பிட வைத்தான். ஆண்டவருக்கு ஏவாள் மீது கோபம் வந்தது. சாத்தான் அந்த கனியை புசிக்க வைத்து, வாழ்வளிக்கும் அந்த தோட்டத்தை விட்டு அவர்களை வெளியே தள்ள வைத்தான்.

**ஆதி 3:24-ல் அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.** பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாக இருக்கிறது போல, அவரும் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய் இந்த பூமிக்கு இறங்கி வந்து, தன்னுடைய உயிரையே கொடுத்து, நம்மை மீட்டெடுத்தார். என் பிள்ளை, என்னுடைய இரத்தம், என் உறவு என்று அவர்களுக்காக அவருடைய இதயம் துடிக்கிறது. **எபிரே 2:14-ல் ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார், மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு,** இந்த பூமியில் மனித அவதாரம் எடுத்து ஒரு கன்னியின் வயிற்றில் இயேசு என்ற பெயரில் வந்து பிறந்தார். **எபிரே 2:9-ல் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.** இயேசு மரணத்துக்கு நியமிக்கப்பட்டார். மரணத்திற்கு பாத்திரவானாக, மரணத்தை ருசி பார்த்தார். அதுவரைக்கும் மனிதர்கள் பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை இந்த பூமியில் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த உலகத்தில் தேவனைத் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவன் உண்டு. பாவத்தை தேடுகிறவர்களுக்கு சம்பளம் உண்டு. அந்த சம்பளம் மரணம். **ரோமர் 6:23-ல் பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.** இயேசு சொல்கிறார் நான் வாழ்வதால் உன்னையும் வாழ வைப்பேன், என்னை தேடினால் உன்னை நான் வாழ வைப்பேன் என்கிறார். இந்த வார்த்தைகள் தேவன் எனக்காக எழுதினது. 16 வயதில் நான் வாழ தகுதியற்றவனாய், வறுமையின் பிடியில் சிக்கி தவித்த போது, விவசாயத்திலும் முன்னேற்றம் இல்லை நஷ்டம், நல்ல வேலை இல்லை, சாப்பிடுவதற்கு சாப்பாடு இல்லை, மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்தேன். ஒரு நண்பர் மூலம் இயேசுவை நான் தேட ஆரம்பித்தேன். இயேசு வாழ்கிறார் என்பதை அப்பொழுது தான் அறிந்து கொண்டேன். யோவான் 14:19 கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் இப்படியாக சொல்லப்பட்டுள்ளது

நான் வாழ்கிறேன் உன்னை வாழ வைப்பேன் என்று எழுதப்பட்டுள்ளது. 1982-ல் என்னை தேடி வந்து, என் கண்ணீரை துடைத்து நான் வாழ்கிறேன் என்று சொல்லி எனக்கு ஒரு நல்ல வேலையை கொடுத்து எனக்கு ஒரு குடும்பத்தை கொடுத்து, ஒரு ஊழியத்தை கொடுத்தார். என்னை வாழ வைத்த தெய்வம் உங்களையும் வாழ வைப்பார். சாது சுந்தர் சிங் இந்தியாவின் அப்போஸ்தலர். தன் வாலிப வயதில் உண்மையான தெய்வம் யார் என்று தேடினார். உண்மையான தெய்வம் யாரென்று தேடித்தேடி திரிந்த அவர் ஒரு தீர்மானம் பண்ணினார் இன்று இரவிலிருந்து காலை நாலு மணி வரைக்கும் நான் பார்ப்பேன் உண்மையான தெய்வம் ஒன்று இருந்தால் அது என் முன்பு வந்து தோன்றட்டும் இல்லை என்றால், காலை நாலு மணி ட்ரெயினில் நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று. கதவு, ஜன்னல் எல்லாவற்றையும் மூடிவிட்டு அவர் வணங்கின தெய்வங்களை கூப்பிட்டும் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவர் பூட்டி இருந்த அறையின் ஜன்னலில் இருந்து ஒரு பிரகாசமான வெளிச்சம் தோன்றினது. அவர் நினைத்தார் அவருடைய தெய்வங்கள் வருவார்கள் என்று. ஆனால் ஒரு சிலுவை தோன்றியது அதிலிருந்து ஒரு கனிவான குரல் ஒலித்தது சுந்தர் சிங் நான் இயேசு என்று ஒலித்தது. அன்றிலிருந்து இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்காக வாழ ஆரம்பித்தார். அதற்கப்புறம் அவரை திருமணம் செய்து கொள்ள பெற்றோர்கள் சொன்னபோது எனக்கு இருந்தது ஒரு இருதயம் அதை நான் இயேசுவுக்கு கொடுத்து விட்டேன். இந்தப் பெண்ணிற்கு கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை என்றாராம். அவர் இயேசுவுக்கு தன்னை அர்ப்பணித்து இயேசுவுக்காக தனிமையில் வாழ்ந்தார். இந்திய தேசத்தில் தோமாவிற்கு அடுத்து அவர் தான் அதிகமாக இந்த தேசம் முழுவதும் ஊழியம் செய்தவர். அந்த சுந்தர் சிங்கை சாதுவாக மாற்றி இந்த இந்தியாவில் வாழ வைத்த தெய்வம் உன்னை விட்டு விடுவாரா? உன்னை ஏமாற்றினவர்களுக்கு முன்பாக உன்னை கைவிட்டு விடுவாரா? நீடித்த நாட்களால் உன்னை திருப்தியாக்கப் போகிறார்.யோசேப்பை குழியில் தள்ளினார்கள், சாகிறவனுடைய சாவை நான் விரும்பவில்லை என்று சொன்ன தேவன் அவனை அந்த குழியில் இருந்து தூக்கி எடுத்தார். பொய் குற்றம் சாட்டப்பட்டு அவனை சிறையில் அடைத்தார்கள். சிறைச்சாலையிலேயே தன் ஜீவன் போய்விடும் என்று யோசேப்பு நினைத்தான். சங்கீதம் 91:15,16-ன்படி அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். என்ற வார்த்தையின்படி தேவன் நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, இரட்சிப்பை அவனுக்குக் காண்பித்து, தப்புவித்து, அவனை அந்த தேசத்தில் கனப்படுத்தினார். இன்றைக்கு இந்த வார்த்தையை வாசிக்கின்ற உங்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார் சாக வேண்டும், போராட பெலனில்லை என்று நினைக்கிற உன்னை நீடித்த நாட்களால் திருப்தியாக்கி, ஆபத்திலே அவனோடு நான் இருந்து அவனை தப்புவித்து அவனை கனப்படுத்துவேன் என்று. என் ஜீவன் மருத்துவர்கள் கையில் இல்லை, வியாதியின் கையில் இல்லை என் ஜீவன் கர்த்தருடைய கையில் இருக்கிறது. நீடித்த நாட்களால் என்னை திருப்தியாக்குகின்ற தேவன் அவர் என்றும் வாழ்கிறார்.

உபா 32:40-ல் நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். நாம் ஆராதிக்கிற தேவன் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்று சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய பரம தகப்பன் தமது சொந்த இரத்தத்தை சிந்தி, விலை கொடுத்து நம்மை மீட்டெடுத்து, அவருடைய பிள்ளையாக நம்மை மாற்றி இருக்கிறவர். சொல்லுகிறார் நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்று.நம் எல்லாருக்கும் ஒரே தகப்பன் அவரே. வானத்தையும் பூமியையும் படைத்தவர். நம்முடைய சரீர பிரகாரமான தகப்பனை காட்டிலும், நம்முடைய பரம தகப்பன் பெரியவர். அவர் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவராய் இருக்கிறார். அவர் வாழ்கிறதினால் நம்மையும் வாழ வைக்கிறார்.

## அவர் நீண்ட ஆயுசுள்ளவர்

நாம் அப்பா நித்தியமானவர். இன்றைக்கும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய ஆயுசுக்கு முடிவே இல்லை. தானி 9:13-ல் இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில்,இதோ,மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர்

இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். இந்த நாளிலும் ஆண்டவர் அநேகருக்கு ஆயுசு நாட்களை கூட்டி தருகிறார். மரணப்படுக்கையை மாற்றுகிறார். நீ மனம் திரும்பினால் பிழைப்பாய். உன் வாழ்க்கை கட்டப்படும். உன்னை விட்டு தூரம் போன எல்லாரும் உன்னிடத்தில் வருவார்கள். நான் உன் மேல் அன்பாய் இருக்கிறதை அவர்கள் அறியும்படி செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன்னை ஆட்கொண்டவர், உனக்காக தன்னுடைய இரத்தத்தை சிந்தி, விலை கொடுத்து வாங்கினவர் இப்பொழுது உன்னை பார்த்து சொல்லுகிறார் இனி உங்களுக்கு எலும்பு தேய்மானம் இல்லை, நரம்புத் தளர்ச்சி இல்லை. பெலவீனனும் தன்னை பெலவான் என்று சொல்லுவான். யோவேல் 3:10-ல் உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள், பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக. நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்து அவரே.

இன்றைக்கு அந்த தேவன் உங்களை பலப்படுத்தப் போகிறார். சூம்பிப் போன உறுப்பு, பலவீனப் பட்டுப்போன உறுப்பு, எந்த பகுதியில் நரம்புகளில் இரத்த அடைப்பு இருக்கிறதோ அந்த உறுப்புகளுக்கு நீண்ட ஆயுசை கொடுக்கிற ஒரு தேவன் இருக்கிறார். அவர் என்றென்றைக்கும் ஜீவித்து இருக்கிறவர். அவர் உன் அருகில் வந்து, உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிற உன்னை பார்த்து, குற்றுயிராய் கிடக்கிற உன்னை பார்த்து பிழைத்திரு என்கிறார். எசேக்கியேல் 16:6-ல் நான் உன் அருகே கடந்துபோகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து: பிழைத்திரு என்றேன், ஆம், உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து பிழைத்திரு என்று சொன்னேன். மிதிக்க ப்படுவதற்கு ஏதுவாய் கிடைக்கிற உன்னை வாழ்ந்திரு, பிழைத்திரு என்று சொல்லுகிறார். சாத்தான் சொல்லுவான் நீ சாகப்போகிற. நீ தோல்வி அடைந்திட்டாய், உன் காலம் முடியப் போகிறது என்று சொல்லுவான். ஆனால் இயேசு உன் அருகில் வந்து உன் தோள் மேல் அவருடைய கைகளைப் போட்டு நான் வாழ்வதால் உன்னையும் வாழ வைப்பேன் என்று சொல்லுகிறார். சாகிறவனுடைய சாவை நான் விரும்ப மாட்டேன். அவனுக்கு ஆயுசு நாட்களை கூட்டி தருவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு

எசேக்கியா நான் சாகப் போகிறேனே. நாளைய தினத்தை நான் காண்பேனோ என்று அழுதான். சங்கீதக்காரன் சொல்லுகிறார் மண்ணிலே நான் படுக்கும் முன்னமே என் பாவங்களை மன்னித்து விடும் என்று கெஞ்சுகிறான். எசேக்கியா அழுத அழுகையை பார்த்து 15 ஆண்டுகள் ஆயுசு நாட்களை கூட்டி கொடுத்தார். யோபுவுக்கு 140 ஆண்டுகள் ஆயுசு நாட்களை கூட்டி கொடுத்தார். அந்த தேவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஒவ்வொரு நாளும் செத்து மடிகிற வாழ்க்கை, என் குடும்பத்தை நடத்திடுவேனா? வேலை கிடைக்குமா? பவுல் சொல்கிறார் 1 கொரி 15 ஆம் அதிகாரத்தில் அனுதினமும் நான் சாகிறேன் என்று. கர்த்தராகிய தேவனால் மரணத்துக்கு நீங்கலாகும் வழிகள் உண்டு. இயேசு என்றைக்கு சிலுவையில் மரித்தாரோ அன்றைக்கே அந்த கேருபீன்கள் ஏதேன் தோட்டத்தில் சுடரொளி பட்டயத்தை எடுத்தார்கள். அந்த அடைப்பை திறந்தார்கள். இயேசு சொன்னார் நானே வழி, சத்தியம், ஜீவன் என்னாலன்றி ஒருவனும் பரலோகராஜ்யத்துக்குள் வர முடியாது என்றார். கர்த்தராகிய தேவனால் மரணத்துக்கு நீங்கலாகும் வழிகள் உண்டு. ஆகவே தான் தேவனால் தைரியமாய் சொல்ல முடிந்தது சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று. சங்கீதம் 68:20-ல் நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார். ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு என்று சொல்லப்பட்டுள்ளது.

இயேசு நமக்காக சிலுவையில் தன் உயிரை கொடுத்து மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே என்றார். இன்றைக்கு அவர் மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உரிய திறவுகோலை உடையவராய் இருக்கிறார். வெளி 1:18-ல் மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன் என்று, மரணத்தை ஜெயித்து, சத்துருவின் தலையை நசுக்கி நான் வாழ்கிறேன். உங்களையும் இந்த பூமியில் நான் வாழவைப்பேன். பரலோகம் கொண்டு செல்லுவேன் என்கிறார். ஆண்டவராகிய தேவன் தாமே இந்த செய்தியை வாசிக்கிற உங்கள் அனைவரையும் நீடித்த நாட்களால், நீண்ட ஆயுசைத் தந்து வழி நடத்துவாராக!.

பெண்கள் பகுதி

# செட்டைகளின் நிழல்



சகோதரி.
கலா வின்செண்ட்ராஜ்

**கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள் நடந்தாலும் சோர்ந்து போகார்கள். ஏசா 40:31**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கழுகு தனக்கு வயதாகி விட்டதை விரும்பாது. தன்னால் முன்போல மாமிசத்தை சாப்பிட முடியவில்லை என்று அதற்கு தெரிந்ததும், உடனே உயர்ந்த மலையில் போய் நீண்ட நாட்கள் ஒன்றும் சாப்பிடாமல் அமர்ந்து கொள்ளுமாம். பல நாட்கள் சாப்பிடாமல் இருப்பதால் அதன் உடல் வற்றி, அதன் இறக்கைகள் எல்லாம் உதிர ஆரம்பிக்கும். தன்னுடைய  பெருத்துப் போன வயிறு வற்றிப் போக, தன் அலகை ஓங்கி ஓங்கி மலையில் அடித்து உடைக்கும். மூக்கில் இரத்தம் வடிய, ஒன்றும் சாப்பிடாமல் அமைதியாய் அமர்ந்திருக்கும். அப்போதுதான் அதற்கு புதிய சிறகுகள் திரும்ப முளைக்க ஆரம்பிக்கும். அலகு புதுப்பிக்கப்படும். சிறகுகள் வளருகிறவரை அமர்ந்திருக்கும். பறக்கத் தயாரான நிலையில் தன்னுடைய புதிய சிறகுகளை அடித்து எழும்பும் போது, புதிய வாலிப வயதைப்போல பெலன்பெற்றுக் கொள்ளும். அதனால் தான் வேதத்தில் கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ கழுகுகளைப் போல் புது பெலனடைவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. நாமும் தேவ சமுகத்தில் அமர்ந்து பொறுமையோடு அவருக்கு காத்திருந்தால், நம்மையும் கழுகைப் போல செட்டைகளை அடித்து எழும்பச் செய்வார்.

**நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது. சங் 103:5**

உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளினால், சோர்வினாலும், எதிர்பாராத நிகழ்ச்சியினாலும் நீங்கள் மனமுடைந்து ஜெபிக்க முடியாமல், வேதப் புத்தகத்தை வாசிக்க முடியாமல் தடுமாறுகிறீர்களா? கழுகைப் போல் ஒரு தனி இடத்தை தெரிந்துகொண்டு, நீங்கள் கவனிக்காமல் விட்டதினால் வளர்ந்து நிற்கிற, பழைய சுபாவங்களை, வேண்டாத பொல்லாத குணங்களை எல்லாம் பிடுங்கி எரிந்து விடுங்கள். ஆண்டவர் இயேசுவுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துங்கள். அப்போது திரும்பவும் நீங்கள் பெலனடைவீர்கள், தேவன் விரும்புகிற திவ்விய சுபாவங்கள், குணங்கள் உங்களில் வளரும். நீங்கள் செட்டைகளை அடித்து எழும்பி தேவனுக்காக வாழவும், அவருக்கு சாட்சியாகவும் மாறுவீர்கள். இன்று ஆண்டவரது செட்டைகளால் நமக்கு என்ன நன்மை கிடைக்கிறது என்று பார்ப்போம்.

## தேவனுடைய பாதுகாப்பு

**அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். சங் 91:4** நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் பாதுகாப்பே இல்லை. எங்கு பார்த்தாலும் விபத்துகள், கண்ணிகள், பூகம்பத்தால் அழிவு, குண்டு வெடிப்புகள், கலவரங்கள் இவைகளெல்லாம் ஒருவிதமான பயத்தை ஏற்படுத்தி, பாதுகாப்பற்ற உலகத்தில் வாழ்கிறோம் என்பதைக் காண்பிக்கிறது. இந்த சங்கீதக்காரர் அவர் உன்னை தமது சிறகுகளால் மூடுவார் என்று சொல்லுகிறார். உண்மைதான். ஆனால் நீ அவரது செட்டைகளின் கீழ் அடைக்கலம் புக வேண்டும் என்கிறார்.

ஒரு தாய்க்கோழி தன் குஞ்சுகளோடு இரைதேடிக் கொண்டிருக்கும்போது வானத்திலே வட்டமிடுகிற பருந்தை பார்த்துவிட்டால் உடனே ஒரு சத்தமிடுகிறது. குஞ்சுகளெல்லாம் தாய்க்கோழியின் இறக்கைகளுக்குள் ஓடி பாதுகாப்பாய் இருக்கிறது. அந்த சத்தத்தை அலட்சியம் செய்யும் குஞ்சுகள் பருந்துக்கு இரையாகிப் போகிறது. நாம் ஒவ்வொரு நாளும் நம்மை பாதுகாக்கிற இயேசுவின் செட்டைகளுக்குள் அடைக்கலம் புகுந்து கொள்ள வேண்டும். நமக்கு விரோதமாய் செயல்படுகிற ஏவல்கள், மாந்திரீகங்கள், பில்லிசூன்யங்கள், செய்வினைகள், பொல்லாத மனிதர்களின் சூழ்ச்சிகள் எல்லாவற்றிலிருந்து நாம் தப்பிக்க ஒரு வழியுண்டு. அது இயேசுவின் செட்டைகளுக்குள் அடைக்கலம் புகுந்து கொள்வதுதான். நாம் அவரிடத்தில் அடைக்கலம் புகும்போது தான், பருந்து அந்த இடத்தை விட்டு போகிற வரை தாய்க்கோழி குஞ்சுகளை எப்படி வெளியே விடாமல் பாதுகாக்கிறதோ அதேபோல பிசாசிற்கும் அதன் செயல்களுக்கும் நம்மை விலக்கி பாதுகாப்பார்.உங்கள் பாதுகாப்பு என்ன? இயேசுவின் செட்டைகளுக்குள் இன்று ஓடி வாருங்கள். இயேசுவே என்னை, என் குடும்பத்தை பாதுகாத்தருளும். உம்மிடத்தில் அடைக்கலம் புகுகிறேன் என்று சொல்லுங்கள். அவர் உங்களை தமது செட்டைகளின் கீழ் மறைத்து பாதுகாப்பார்.

## நிறைவான பலன்

**உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். ரூத் 2:12**

நகோமி என்ற பெண் தன் கணவனை இழந்து தன் இரண்டு மகன்களையும் இழந்து பின்பு மோவாப் தேசத்தை விட்டு தன் சொந்த நாட்டிற்கே போக விரும்பினாள். தன் மருமக்களைப் பார்த்து நீங்கள் உங்கள் தாய் வீட்டிற்கே போய் விடுங்கள் என்றாள்.ஆனால் ரூத் என்ற மருமகள் அந்த மாமியை விடவேயில்லை. அவள் ஒரு மோவாப் தேசத்து பெண் நீர் எங்கு போனாலும் அங்கே நான் வருவேன் என்று சொல்லி மாமியை பின்தொடர்ந்து வந்தாள். **ரூத் 1:16-ல் அதற்கு ரூத், நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றாள்.** கடைசி வரியைப் பாருங்கள். உம்முடைய தேவன், என்னுடைய தேவன். இங்கே தான் ரூத் மகிமையான தேவனுடைய செட்டைகளுக்குள் வருகிறாள். அதுவரை தங்கள் தேவர்களை வணங்கி வந்த அவள் இஸ்ரவேலின் தேவனை தன்னுடைய தேவன் என்று ஏற்றுக்கொள்கிறாள். **யோவா. 1:12-ல் அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்** என்ற வசனத்தின்படி ரூத்தை தேவன் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார்.

1982-ல் ஆம் ஆண்டு என் தந்தை சுகவீனப்பட்டார். மருத்துவர்கள் இவர் பிழைக்க மாட்டார் என்று கைவிடப்பட்ட நிலையில்,நான் இயேசுவை நோக்கி கூப்பிட்டேன். இயேசு என் தகப்பனாருக்கு சுகம் தந்தார். அன்றிலிருந்து நான் இயேசுவை தேவனாக ஏற்றுக்கொண்டேன். அவர் என் வாழ்க்கையில் நிறைவான பலனை காணச் செய்தார். எனக்கு ஊழியத்தை கொடுத்து, நல்ல கணவரையும், பிள்ளைகளையும், மருமக்களையும் தந்து அவருடைய வேலையை, பணியை நாங்கள் குடும்பமாக செய்ய வைத்திருக்கிறார். இந்த நிறைவான பலன் உங்களுக்கு வேண்டுமா? இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, இயேசுவை சொந்த தேவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது அவரது செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உங்களுக்கு நிறைவான பலன் கிடைக்கும்.

# தெய்வீக சுகம்

ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள். மல் 4:2

ஆண்டவரை ஏற்றுக் கொண்டபின் அவரது வசனத்தை. வேதத்தை நாம் தேடி வாசிக்க வேண்டும். என்னுடைய கரம் இவைகளை யெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன். ஏசா 66:2. வேத வசனத்தை வாசித்து ஆண்டவருக்கு பயந்து தீமையை விட்டு விலக வேண்டும். அப்படி அவருக்கு பயந்து வாழ்கிற நமக்கு ஆரோக்கியம் உண்டாகும். என் திருமணத்திற்கு பின்பு ஒருவித அலர்ஜியால் பாதிக்கப்பட்டேன். இந்த நிலையில் நான் வேதத்தை வாசித்து, அந்த வார்த்தைகளை அந்த வார்த்தைகளை என் வாழ்க்கையில் அனுபவிக்க ஆரம்பித்தேன். என் பெல வீனத்திலிருந்து முற்றிலும் சுகமாக்கப்பட்ட நான் ஆண்டவரின் ஆரோக்கியத்தை விளங்கிக் கொண்டேன். உங்கள் வாழ்விலும் தேவனுடைய தெய்வீக சுகத்தை பெற வேத வசனத்தின்படி நடந்து ஆரோக்கியமான, ஆசீர்வாதமான வாழ்க்கை வாழுங்கள்

# தேவ வழிநடத்துதல்

கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்து கொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை. உபா. 30:11

கழுகு தன் குஞ்சுகளுக்காக ஒரு கூட்டை கஷ்டப்பட்டு கட்டுகிறது. மிக பத்திரமாக தன் குஞ்சுகளை அதில் வைத்து பாதுகாத்து, உணவு கொடுத்து வளர்க்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வந்த உடன் வேகமாக வந்து அந்தக் கூட்டைக் கலைக்கிறது.குஞ்சுகள் தன் சிறகுகளை அடித்து பயந்து ஐயோ! அவ்வளவு தான் நாம் செத்தோம் என்று நினைக்கும். இவ்வளவு நாள் நம்மை உணவு கொடுத்து, பத்திரமாய் பாதுகாத்த, நம்முடைய தாய் இன்று ஏன்? இப்படி கூட்டைக் கலைத்து நம்மை தவிக்க வைக்கிறது. அவ்வளவுதான் நம் கதை முடிந்தது என்று நினைக்கையில் அந்தக் குஞ்சுகளுக்கு மேல் தாய்க்கழுகு அசைவாடுகிறது. தன் செட்டைகளை குஞ்சுகளுக்கு அருகில் விரித்து அதை எடுத்து தன் சிறகில் வைத்து சுமந்து போகிறது. இவ்விதமாய் கழுகு தன் குஞ்சுகளுக்கு பறக்கக் கற்றுக் கொடுக்கிறது.

உங்கள் வாழ்க்கையிலும் அமைதியாய் சென்று கொண்டிருந்த உங்கள் குடும்பத்தில் சமாதானக் குறைவா? இயேசுவை ஏற்றுக்கொண்ட உடன் என் வாழ்க்கை நன்றாயிருந்தது. ஆனால் திடீர் என்று ஏன்? இந்தக் குழப்பம். ஏன்? இந்த வேதனை. ஏன்? இந்தக் கடன் இதுவரை ஆண்டவர் எனக்கு கட்டிக் கொடுத்த கூட்டில் (வீட்டில்) அமைதியாய் இருந்தேன். இப்போது ஏன்? அதைக் கலைக்கிறார்.இப்போழுது ஏன்? என் ஜெபம் கேட்கப்படாதது போல உணர்வு எனக்கு வருகிறது. எல்லாவற்றிலும் ஒரு வெறுமை. தோல்வியைப் பார்க்கிறேன். ஆண்டவர் என்னை மறந்துவிட்டாரோ? என்று கலங்குகிறீர்களா? ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை (ஏசா 49:15) என்றவர் உங்களை மறந்துவிடுவாரா?

அவர் நம் கூட்டை கலைத்திருப்பது நாம் விழுந்து, செத்து விட வேண்டும் என்பதற்காக அல்ல. நாமும் பறக்க வேண்டும் என்று. கலங்கி பதறி, அழுது கொண்டிருக்கிற உன்மேல் அசைவாடி உன்னை தமது தோளில் சுமந்து கொள்வார். அவர் நம் பாவங்களை சிலுவையில் சுமந்தார். நம்மேல் விழுந்த சாபங்களை சுமந்தார்? உங்கள் கவலைகளை சுமக்கிறது அவருக்கு லேசான காரியம்.நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் நமக்கு போதித்து, ஆலோசனை சொல்லி, நம் கரத்தைப் பிடித்து முடிவு பரியந்தம் நம்மையும் நம் குடும்பத்தையும் வழி நடத்துகிறவர் தேவன் ஒருவரே. ஆண்டவராகிய தேவன் தாமே அவருடைய செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து, பராமரித்து, நிறைவான பலனினால் நிரப்பி வழிநடத்துவாராக!.



# கொல்கொதாவை நினைவுபடுத்தும் கொல்கொத்தா

சகோ . பிரேமா டேவிட்

**தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப் படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே எபி 12:3.4.**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, தமது சொந்த இரத்தத்தினாலே நம் அனைவரையும் பரிசுத்தம் செய்யும்படியாய் சிலுவையில் நமக்காய் பலியான நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் கொல் கொத்தாவில் பெண் பயிற்சி மருத்துவருக்கு ஏற்பட்ட துயரம் நாடு முழுவதிலும் ஒரு பெரிய வேதனை யைக் கொடுத்தது. அந்த மகளுக்காக நீதி கேட்டு பலரும் போராடி வருகின்றனர். அந்தப் பெண்ணின் பெற்றோரின் மனவேதனைகள் நீங்கி ஆறுதலடைய, இதுபோன்று நடக்கக்கூடாது என கருத்தாக ஜெபிப்போம். தீய செயல் செய்யும்படி தங்களை விற்றுப் போட்டவர்களும், சாத்தானால் பிடி பட்டவர்களும் மனந்திரும்பினால் தான் நம் தேசம் நன்றாயிருக்கும். கொல்கொத்தாவில் நேர்ந்த துயரத்தைப் போலவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கொல்கொதாவில் நடந்த கொடுந்துயரம் உங்களுக்குத் தெரியும்தானே!

யூதேயா நாட்டில் அதாவது தற்போதுள்ள இஸ்ரவேலில் இயேசு ஒரு யூத குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, வாலிபனானபோது, பாவ வழிகளில் செல்லும் மனிதர்களை பரலோகம் சேர்ப்பதற்காக, நல்ல போதனைகளை மக்களின் பிரயோ ஜனத்துக்காக எண்ணற்ற நன்மைகளை செய்தார். நான் இவ்வுலகத்திற்குரியவனல்ல என்று அவர் கூறியிருந்தாலும் மக்கள் கூட்டம் இவன் பக்கம் சாய்ந்து விடுமோ, தங்கள் பதவி பறிபோய் விடுமோ என்று மதத்தலைவர்கள் பயந்து ஒரு திட்டம் போட்டனர். இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் கெத்சமனே தோட்டத்தில் ஒரு இரவில் தனது சீடரோடு இயேசு ஜெபித்து கொண்டிருந்தபோது யூதாஸ் முத்தமிட்டு காட்டிக்கொடுத்தான். அவரைக் கைதுசெய்து நியாயவிசாரணைக்காக மதத்தலைவர்களின் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தினர். அவரிடம் குற்றம் இல்லை என்றாலும் தன்னை கடவுளின் மகன் என்று சொல்லுகிறான் என்று சொல்லி ரோம அரசின் ஆளுநர் பிலாத்துவினிடம் அவரைக் கொண்டு வந்து நிறுத்தி இவன் மதத்துரோகி மட்டுமல்ல ராஜாவுக்கு விரோதமாகவும் கலகம் செய்கிறவன், எனவே சிலுவையில் அறையும் என்று முறையிட்டனர். பிலாத்து இயேசுவிடம் நீ செய்த தவறு என்ன, நீ யூதர்களின் ராஜாவா என்று கேட்டதற்கு சத்தியத்தைக் குறித்து சொல்வதற்காகவே பிறந்தேன் என்றார். பிலாத்து இயேசுவை எப்படியாவது விடுதலை பண்ண முயற்சி செய்தான். பரபாஸ் என்ற திருடனை விடுதலை செய்ய அந்த ஜனம் விரும்பியது. ஆனால் இயேசுவையோ சிலுவையில் அறையும் என்ற கூக்குரலிட்டது.

பிலாத்து இயேசுவை சவுக்கால் அடிக்குமாறு கட்டளையிட்டான். போர்ச்சேவகர்கள் அவரை சவுக்கால் அடித்தபோது அவருடைய முதுகெல்லாம் உழப்பட்ட நிலம் போலானது. தலையிலே முள்முடியினாலே கிரீடத்தை வைத்து யூதருடைய ராஜாவே வாழ்க என்று காறி உமிழ்ந்தார்கள். தலையில் குட்டினார்கள், முகத்தில் அறைந்தார்கள். ஒரே இரத்தமயமாயிருந்த இயேசுவைப் பார்த்தாவது சிலுவையில் அறையச் சொன்னவர்களின் மனம் இரங்காதா என்று பிலாத்து நினைத்தான். அவர்களோ சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டதால் பிலாத்தும் அனுமதித்தான். அவர் தம்முடைய

சிலுவையைச் சுமந்துகொண்டு எபிரேயு பாஷையிலே 'கொல்கொதா' 'என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். அங்கே அவரைச் சிலுவையில் ஆணிகளால் அறைந்தார்கள். யோவான் 19:17,18. இரண்டு கள்வர்களுக்கு நடுவில் ஒரு கள்வனைப் போல் தொங்கின. அவர் ஆடையை கூட சீட்டுப் போட்டு எடுத்துக் கொண்டார்கள். தாகமாயிருக்கிறேன் என்ற அவருக்கு கசப்பு கலந்த காடியை குடிக்க கொடுத்தார்கள். ஆறு மணிநேரம் சிலுவையில் தொங்கிய இயேசு மரித்தபோதும் ஈட்டியினால் அவர் விலாவில் குத்தினார்கள்.

இவ்வளவு கொடுந்துயரங்கள் இயேசுவுக்கு ஏன் நேர்ந்தது?. அவர் மனிதனல்ல தேவன். மனிதர்களை பாவத்திலிருந்தும். சாத்தானிடமிருந்தும் காப்பாற்ற வந்த தேவன். மனிதனின் பாவத்திற்குப் பரிகாரத்தை ஒரு மனிதன் தான் செய்ய வேண்டும். அந்தப் பாவத்திற்கு தண்டனை யாராலும் அனுபவிக்கக் கூடாத நரக வேதனையாயிருந்தது. எனவே பாவத்திலே அழிந்து கொண்டிருக்கும் மனிதர்களை காப்பாற்ற இயேசு என்ற பெயரில் யூத குடும்பத்தில் பிறந்த, வளர்ந்த அவரை சொந்த ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி இறைவன் மனிதனாய்ப் பிறந்து மனிதர்களை தம்மிடமிருந்து காப்பாற்றப் போகிறாரே. அவரை அழிந்துவிட்டால் மனிதர்களை அவர் எப்படி காப்பாற்றமுடியும் என்று சாத்தான் அவன் வலையில் சிலரை சிக்க வைத்து, அவர்களை தன் ஆட்களாக பயன்படுத்தி இயேசுவை சிலுவையில் அறைந்தான். அவர் ஒரு மதத்தலைவனோ, மகானோ, மனிதனாக அல்லாததினாலே அவனுடைய சூழ்ச்சிகளை முறியடித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார். இன்றைக்கும் சதாகாலமும் உயிரோடிருக்கிறார்.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப் பட்டார்.நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ண, தண்டனை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் காப்பாற்றப்படுகிறோம். ஏசாயா 53:4,5. எனவே அருமையான தம்பி, தங்கைகளே இயேசு என்னுடைய பாவத்திற்காக, எனக்காகத் தான் இத்தனை துயரங்களை தன் மேல் ஏற்றுக்கொண்டார் என்பதை உங்கள் உள்ளத்தில் நம்பி, இயேசுவே, நீரே என்னைக் காப்பாற்ற வந்த தெய்வம். என் பாவங்களை மன்னியும். என் உள்ளத்தில் வாரும். உம்மை என் ஆண்டவராக ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்வீர்களானால் அவரும் உங்களை தம் பிள்ளையாக ஏற்றுகொள்வாள். யோவா 1:12. இயேசுவின் பிள்ளையான நீங்கள் நடமாடும் இயேசுவாக அவரைப் போலவே சிந்தித்து பார்வை, பேச்சு, நடை, உடை, பாவனையெல்லாம் தேவனுக்கு பிரியமாய், எதிர் பாலினத்தவருக்கு இடையூறாய் இல்லாமல். இருந்தால் நீங்களும் பாதுகாப்பா யிருப்பீர்கள். மற்றவர்களும் பாதுகாப்பாயிருப்பார்கள்.

செல்போனுக்கும். குடிக்கும் போதைப் பொருளுக்கும் ஆபாச படம் பார்ப்பது, கேம்ஸ் இதுபோன்ற காரியங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறீர்களா! பழைய பாவப்பழக்கங்கள் எதுவாயிருந்தாலும் நீங்கள் இயேசுவை விசுவாசித்து பாவத்திற்காய் மனம் வருந்தினபோதே அவையெல்லாம் சிலுவையில் அறையப்பட்டு விட்டது. இனி நீங்கள் பாவி அல்ல. உங்களுக்குள் இயேசு வாழ்கிறார். நீங்கள் பரிசுத்தமாய் வாழ தினமும் வேதம் வாசித்து அவரோடு ஜெபத்தின் மூலம் பேசுங்கள். அவரும் உங்களோடு பேசுவார். சந்தோஷமாக நீங்கள் வலிப நாட்களைக் கடந்து போகலாம். வீணானதைப் பார்த்துப் பேசி நேரம் செலவு செய்யும் போது தான் மனஅழுத்தம். தற்கொலை, கொலை, கொள்ளை, தகாததை செய்ய தூண்டப்படுதல் நடக்கிறது.

கல்லூரி படிக்கும் தன் மகளோடு 10-வது படிக்கும் தன் மகனை கடைக்கு துணைக்குப் போய் வா என்று அனுப்பினார்கள் அம்மா. கடைக்குச் சென்று திரும்பும் வழியில் சில இளைஞர்கள் அக்காவை கேலி செய்தனர். இந்தத் தம்பிக்கு அக்காவை இப்படி கேலி பண்றாங்களே என்ற வேதனையும், கோபமும் இருந்தது. ஆனால் அவன் அக்கா இவங்க இப்படித் தான் என போய்விட்டாள். வீட்டிற்கு வந்ததும் அம்மாவிடம் நடந்ததைச் சொன்னான். அம்மா சொன்னார்கள் அக்காவிற்கு துணைக்கு உன்னை நான் அனுப்பவில்லை, நீ வளர்ந்த பின்பு இதுபோல யாரையும் கேலி செய்யக்கூடாது. எந்தப் பெண்ணையும் இப்படி நடத்தக்கூடாது என்பதை தெரிந்து கொள்ளவே அனுப்பினேன் என்றார்கள். வளர்ந்த பிறகும் அவன் அதை மறக்க வில்லை. பெண்களைக் கேலி செய்த பல நண்பர்களின் நட்பை துண்டித்துவிட்டு நற்பண்புகளுடன் மிளிர்ந்தான். இது பெண்களுக்கும் பொருந்தும். எல்லா வயதினருக்கும் தான். ஒருவேளை நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், பாவிகளால் துயரங்களை சந்திந்த, சகித்து. இயேசுவை நினைத்துப் பாருங்கள். உங்கள் மனவேதனைகளை நீக்கி உங்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் தருவார். தீமையை எதிர்த்து. கிறிஸ்துவில் நிலைத்திருங்கள். பாவமோ தீமையோ உங்களை அணுகாது, பாவம் உங்களை மேற்கொள்ளாது. நமது பாதுகாப்பும், அடைக்கலமுமாகிய ஆண்டவர் தாமே உங்களை பாதுகாத்து அனைத்திலும் வெற்றி பெற உதவி செய்வாராக!.

# பறந்து போகும் பயம்

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

அருமையான அப்பா, அம்மாவுக்கு அருண்-ன்னு ஒரு குட்டி சுட்டி பையன் இருந்தான். அவனுக்கு எப்பவெல்லாம் லீவு கிடைக்குதோ அப்போ எல்லாம் அவங்க அப்பா, அம்மா அவனை பாட்டி வீட்டுக்கு ட்ரெயின்ல கூட்டிட்டு போவாங்க. அருண் இப்ப 7-வது படிக்கும் கொஞ்சம் பெரிய பையனா வளர்ந்து விட்டான். ஒருநாள் அப்பா அம்மா கிட்ட வந்து இந்த லீவுல நான் தனியா பாட்டி வீட்டுக்கு ட்ரெயின்ல போறேன்னு சொன்னான். நான் தான் இப்ப பெரிய பையன் ஆயிட்டேன்-ல என்றான். அப்பாவும், அம்மாவும் ரொம்ப நேரம் யோசிச்சு, சரி, நீ போ ஆனா நாங்க தான் உன்னை ட்ரெயின்ல ஏத்தி விடுவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை என்றவுடன், அருணும் ரொம்ப சந்தோஷமா ஐயா, நம்ம நெனச்சபடியே ட்ரெயின்ல தனியா போக போறோம், ஸ்நாக்ஸ் எல்லாம் வாங்கி சாப்பிடலாம் என்று நினைத்து சிரிப்பா என்றான். மறுநாள் மதியம் ரெண்டு மணிக்கு ட்ரெயின், 12 மணிக்கு அருண் புறப்பட்டு விட்டான். அப்பா, அம்மா, அருண் மூன்று பேரும் ஆட்டோ பிடித்து ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். அம்மாவையும், அருணையும் பிளாட் பார்மள நிற்க வைத்து விட்டு அப்பா டிக்கெட் கவுண்டருக்கு சென்று டிக்கெட் எடுத்து வந்தார். அதற்கு அப்புறம் டிக்கெட்டை அவனுடைய பேக்ல சைடு ஜிப்ல பத்திரமாக வைத்துக்கொள் என்று அப்பாவே பேக்ல வைத்து விட்டார். அதனுடன் ஒரு கவரையும் சேர்த்து அப்பா வைத்தார் அது என்னங்கப்பா கவர் என்று கேட்டான் அருண். உனக்கு எப்பவாவது பயமா இருந்தா இந்த கவரை பிரித்துப்படி என்றார். அவனும் ட்ரெயினில் உட்கார்ந்து இருக்கிற சந்தோஷத்துல சிரிப்பா சிரிப்பா என்றான். ட்ரெயின் கிளம்பும் போது டாட்டா காட்டிட்டு அம்மாவும், அப்பாவும் புறப்பட்டார்கள். அருணுக்கு ரொம்ப சந்தோஷம் மட்டுமல்ல ரொம்ப பெருமையாவும் இருந்துச்சு. நானே தனியா ட்ரெயின்ல போறேன். வேடிக்கை பார்த்துக்கொண்டு, ஸ்நாக்ஸ் சாப்பிட்டுக் கொண்டே இருந்தான். ட்ரெயின் டிக்கெட் பரிசோதிக்கிறவர் வந்தார். எல்லாரும் டிக்கெட்டை காண் பித்தார்கள். அருணிடம் வந்தபோது அவனும் டிக்கெட்டை காண்பித்தான். என்ன தம்பி நீ மட்டும் தான் வந்திருக்கிறாயா? உங்க அம்மா, அப்பா வரலையா? நீ தனியா வந்திருக்கிறாயா? என்று கேட்டவுடன், அவனுக்கு நெஞ்சு படபடன்னு அடிக்க ஆரம்பிச்சிருச்சு. ஆமாம் சார்னு அவன் சொல்லி கொண்டிருக்கும் போதே, அங்கே உட்கார்ந்து இருக்கிறவங்க எல்லாரும் இந்தப் பையன் தனியாக வந்திருக்கானா என்ன தைரியம் தனியா வந்திருக்கான் என்று பேசுறது அவன் காதுல விழுந்தவுடன் அவனுக்கு ரொம்ப பயமாயிருச்சு. உடனே அவனுக்கு அவங்க அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வந்துச்சு. வேகமா அப்பா வச்ச கவர் எடுத்து பிரித்து படித்தான். பயந்து போன அவன் முகம் உடனே சந்தோஷமானது. அவன் என்ன படிச்சன்னு தெரிஞ்சுக்க உங்களுக்கு ஆசையா? இதை நீங்களும் படிக்கிறீங்களா? அருண் நீ உட்கார்ந்திருக்கிற பெட்டிக்கு அடுத்த பெட்டியில தான் அம்மாவும், நானும் உட்கார்ந்திருக்கிறோம் பயப்படாதே, ஓகே வா என்று எழுதி இருந்துச்சு. கொஞ்சம் தூரத்துல இறங்க வேண்டிய இடமும் வந்துருச்சு. அருண் இறங்கின உடனே அப்பா, அம்மாவை பார்த்து நான் ரொம்ப பயந்துட்டேன், நீங்க எழுதினதை பார்த்த உடனே தான் பயம் எல்லாம் பறந்து போயிருச்சு என்று சொன்னான். குட்டீஸ் இயேசப்பாவுடைய வார்த்தைகளைப் படிங்க. உங்க பயமும் பறந்து போய்விடும்.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா எதற்கெடுத்தாலும் எனக்கு பயமா இருக்குது. எல்லா பயத்திலிருந்தும் என்னை காப்பாத்துங்க. உங்க வசனத்தைப் படிக்க எனக்கு உதவி செய்யுங்க. நீங்க என்னோடு கூட இருப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.



### மனப்பாட வசனம்

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். ஏசாயா 41:10

# மன விருப்பங்களை நிறைவேற்றுகிறவர்



**சகோதரி – அருணா - பூனே**


நான் கடந்த வருடத்தில் என் மகளுக்கு நிரந்தரமான நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று தங்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். என் மகளும் பல INTERVIEW Attend பண்ணியும் வேலை கிடைப்பதில் தடையாகவே இருந்தது. விசுவாசத்தோடு நாங்கள் ஜெபித்தோம். தாங்களும் என் மகளுக்காக ஜெபித்ததை கர்த்தர் கேட்டு, மனமிரங்கி அற்புதம் செய்தார். ஒரு நல்ல இன்டர்நேஷனல் கம்பெனியில் வேலை கிடைக்க உதவி செய்தார் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரர் - ஜெபராஜ் - திருநெல்வேலி**

நான் தினமும் தங்களின் நேரலை நிகழ்ச்சியை தவறாமல் பார்த்து வருகிறேன். ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியும் எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாக உள்ளது. நிகழ்ச்சியில் பாடப்படுகிற பாடல்கள், மற்றவர்களுக்காக, தேசத்திற்காக ஏறெடுக்கிற ஜெபம், சகோதரர் கொடுக்கிற தேவ வார்த்தை எல்லாம் நான் இயேசுவை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள உதவியாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். என்னைப் போன்று அநேகர் இந்த நிகழ்ச்சியை பார்த்து ஆசீர்வதிக்கப்பட வேண்டும்.

**சகோதரி – பிரேமா – மதுரை**

சில மாதங்களாக என் மகன் வேலைக்கு செல்லாமல் தீய நண்பர்களோடு சேர்ந்து நேரத்தையும், காலத்தையும் வீணாக்கினான். நான் மிகுந்த மனவேதனையில் இருந்தேன். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் தங்களின் ஊழியத்திற்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு என் மகன் மனந்திரும்பவும், வேலைக்குச் செல்லவும் ஜெபிக்க கேட்டேன். கர்த்தர் தங்களின் ஜெபத்தை கேட்டார். என் கண்ணீரின் ஜெபத்துக்கு கர்த்தர் பதில் கொடுத்தார். என் மகன் திரும்பவும் அதே வேலைக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார். ஜெபித்த உங்களுக்கு நன்றி. என் மகனுக்கு மனமாற்றத்தைக் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.



## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

A/C NAME : JESUS LIVES TRUST
BRANCH : KOCHADAI MADURAI
BANK NAME : UNION BANK OF INDIA
A/C.NO : 49390201001022
IFSC CODE : UBIN0549398

A/C NAME : L.VINCENT RAJ
BRANCH : MADURAI
BANK NAME : AXIS BANK
A/C.NO : 109010100247030
IFSC CODE : UTIB0001765

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

### 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# 'ட்ரிபிள் ஈ' வைரஸ்

அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் உள்ள கொசுக்களில் 'EEE' எனப்படும் அரிய, ஆனால் மிகவும் ஆபத்தான வைரஸ் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்த வைரஸ் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடும். 'ஈஸ்டர்ன் ஈக்வைன் என்செபாலிடிஸ் அல்லது 'ட்ரிபிள் ஈ' (Eastern Equine Encephalitis - EEE) என்று அழைக்கப்படும்.

## EEE என்பது என்ன? எவ்வாறு பரவுகிறது?

ட்ரிபிள் ஈ' வைரஸ், கொசுக் கடி மூலம், முக்கியமாகப் பறவைகள், குதிரைகள், மற்றும் மனிதர்களுக்குப் பரவும் ஒரு வைரஸ் ஆகும். இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்களுக்கு எந்த அறிகுறிகளும் உருவாகவில்லை. இந்த வைரஸ் மிகவும் அரிதானது. ஆனால் இது மிகவும் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். இது காய்ச்சல் மற்றும் ஆபத்தான மூளை வீக்கத்தை ஏற்படுத்தும்.

தொற்று ஏற்பட்ட மூன்றில் ஒரு பங்கு பேர் இறக்கக் கூடும் என்று நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (CDC) கூறுகிறது. இந்த தொற்று ஏற்பட்ட ஒரு நபரிடமிருந்து இன்னொருவருக்கு இந்த வைரஸ் பரவாது.

## EEE-இன் அறிகுறிகள் என்ன?

'ட்ரிபிள் ஈ' தொற்றால் பாதிக்கப்பட்டவர் களுக்குப் பொதுவாக, 4 முதல் 10 நாட்களுக்குள் அதற்கான அறிகுறிகளைக் ஏற்படும் என்று நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (CDC) கூறுகிறது. காய்ச்சல், சளி, உடல்வலி, மற்றும் மூட்டு வலி ஆகியவை இதில் அடங்கும். இந்தத் தொற்று ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வரை நீடிக்கும். இதனால் மத்திய நரம்பு மண்டலம் பாதிக்கப்படாவிட்டால், மக்கள் முழுமையாக குணமடைகின்றனர். ஆனால், சிலருக்கு மெனிஞ்சிடிஸ் (meningitis - மூளைக் காய்ச்சல்) அதாவது மூளை மற்றும் தண்டுவடத்தைச் சுற்றியுள்ள சவ்வுகளின் வீக்கம், அல்லது மூளையில் வீக்கம் ஏற்படும். இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்ட கால பாதிப்பாக, அறிதல் குறைபாடு, ஆளுமைக் கோளாறுகள், வலிப்பு, பக்கவாதம், மற்றும் கழுத்துப் பிரச்னைகள் ஏற்படலாம்.

## தற்காத்துக் கொள்வது எப்படி?

ட்ரிபிள் ஈ தொற்றுக்கு தடுப்பூசி இல்லை, அதனை குணப்படுத்தும் மருந்து இல்லை. இதற்கான சிகிச்சையில் நரம்பு வழி திரவங்கள் மற்றும் செயற்கை சுவாசம் ஆகியவை அடங்கும்..

அதற்கு கீழ்கண்ட வழிகள் அறுவுறுத்தப்பட்டிருக்கின்றன:

கொசுக்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கக் கூடிய அந்தி வேளைக்குப் பிறகு வெளிப்புற நடவடிக்கைகளைத் தவிர்ப்பது

- கொசு விரட்டிகளைப் பயன்படுத்துவது
- உடலை முழுவதுமாக மறைக்கும் ஆடைகளை அணிவது
- ஜன்னல்களில் கொசு வலைகளை அமைத்தல் மற்றும் சரிசெய்தல்
- கொசுக்கள் இனப்பெருக்கம் செய்ய உதவும், தேங்கிய நீரை வெளியேற்றுதல்.

Owned & Published by: Bro.I.VincentRaj , & Editor Bro.I.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai


OCT
02
WEDNESDAY
TIME : 9:30 AM
பெங்களூரில்
விசேஷித்த
ஜெப
கூட்டம்
CONTACT
94980 00449
94428 00449
இடம்:


கோயம்பத்தூரில்
17வது ஆண்டு
உபவாச ஜெப
முகாம்
11
அக்டோபர்
வெள்ளிகிழமை
10 AM -5 PM
இடம்:
TELC ஆலய சபா மண்டபம்
மணி கூண்டு அருகில்,
டவுன்ஹால், கோவை-1.
தொடர்புக்கு:
94980 00449,
94428 00449,94434 26765


புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
LIVE
நம்பிக்கையின்
இரவு
அக்டோபர்
31
இரவு
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூகஊடகங்கள்
மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.